1973 டிசம்பர் 3]

Thiru B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Electricity whether the World Bank is going to give loan so as to implement the present schemes successfully in Tamil Nadu?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பொதுவாக வாரியத்திற்கு நிதி திரட்டப்படவேண்டுமென்ற கருத்து ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. விவாதிக்கப்பட்ட விஷயங்கள் நல்ல முறையில் இருப்பதாக மத்திய சர்க்கார் கூறியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: அந்தப் பேச்சு வார்த்தையின்போது வாங்கியுள்ள கடனுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பது கேட்கப்பட்டதா? அதற்கு உலக வங்கியின் பதில் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபற்றியும் பேசியிருக்கிறார்கள். ஆனால் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

மாயூரம் அருள்திரு இந்தளூர் கல்யாண மண்டபம்

*595 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அருள்திரு இந்தளூர் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தினைக் கட்டி முடிக்க அரசு அனுமதித்துள்ள சலுகைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சலுகைகள் எதும் கொடுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: மாயூரம் திரு. இந்தளூர் ரங்கநாத சுவாமி கோயிலில் இரண்டு லட்சத்து இருபதாயிரத்தில் ஒரு திருமண மண்டபம் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் அரசு 81 வது பசலிக்கு குத்தகை அளந்துவிட்டால் பாக்கியுள்ளவை தள்ளுபடி செய்யப்படும் எனச் சட்டம் கொண்டுவந்த காரணத்தினால் ஆலயத்திற்கு வரவேண்டிய 3 லட்ச ரூபாய் வருமானம் வர இயலாமல் போய்விட்டது. இதை மனதில்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1973 டிசம்பர் 3

கொண்டாவது அரசாங்கமே அதற்கு மானியமாகவோ அல்லது வேறு கோயில்களின் நிதியையோ மாற்றி அளிக்க வழிவகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தத் திருமண மண்டபத்தைக் கட்ட போதுமான நிதி வசதி அந்தக் கோயிலில் இருக்கிற காரணத்தினுல் வேறு கோயிலில் இருந்து மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

பழனி கோயில் திருவிழாச் செலவு.

*** 596 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் பழனி கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழாவுக்கு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏதுமில்லை.

திருத்தணி கோயிலுக்கு புதிய தேர்.

*** 597 வினு—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி கோயிலுக்கு தங்கத்தேர் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்படி தங்கத் தேர் செய்கிறபோது அரசின் சம்மதம் பெற்றுச் செய்கிருர்களா ? அல்லது கோயிலில் இருக்கிறவர்களே முடிவு செய்துகொண்டு செய்கிருர்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயிலில் இருக்கிற அறங் காவலர்கள் முடிவு செய்துகொண்டு, அறநிலையத் துறை ஆணையரின் அனுமதி பெற்று நிறைவேற்றுகிருர்கள்.